**தலைப்பு 176 – துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அலுவல்கள் அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆம் ஆண்டு**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்த) சட்டத்தினால் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது அட்டவணையிலும் மூன்றாவது அட்டவணையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்பு மற்றும் விடய இலக்கம் என்பவற்றின் கீழ் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று, துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அலுவல்கள் அமைச்சினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலிருந்தும் இணக்கக் கூற்றுக்களில் இருந்தும் நிரூபணமாகும் நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

## 1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களித்தன்மை தொடர்பான பொறுப்பு

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளின் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரமும் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமான கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியினால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தினால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.3 கணக்காய்வு நோக்கெல்லை

தலைப்பு 176 – துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அலுவல்கள் அமைச்சின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு உரிய தரப்பினருக்கு செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 அக்தோபர் 22 ஆந் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் அறிக்கைகள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அலுவல்கள் அமைச்சில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது கண்டறியப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.10 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மையினை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசின் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 127 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றும் போது கண்டறியப்பட்ட பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிதன்மையை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளது. இவை அவதானிக்கப்பட்டன.

| நிதிப் பிரமாணம் | நிதிப்பிரமாணம் 127 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களித்தன்மை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் அந்த ஏற்பாடுகளுடன் இணங்காதிருந்தமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு |
|---|---|---|---|
| 127(1)(அ) | சரியான மற்றும் நிதி முறையாக செயற்படுவதாக உறுதிப்படுத்தப்படும் வகையில் சகல நிதி செயற்பாடுகளும் திட்டமிடப்படல். | 1. செயல் நடவடிக்கைத் திட்டம் சரியாக தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | 2.1(அ) முதல் (உ) |
| | | 2. பெறுகை நடவடிக்கை போதியளவில் திட்ட மிடப்படாமை. | 2.3.1(அ) |
| 127(1)(ஆ) | செலவினம் மற்றும் அரச வருமான சேகரிப்பு தொடர்பாக போதியளவு கட்டுப்பாட்டிற்கு ஏற்பாடுகள் தயாரிக்கும் முறைமை ஒன்று தயாரித்து கொள்ளல். | 1. சிக்கனமற்ற கொடுக் கல் வாங்கல்கள் | 2.5 |
| | | 2. முகாமைத்துவத் திறமையின்மை | 2.7(அ)(ஆ) |
| | | 3. தீர்க்கப்படாத கணக்காய்வு பந்திகள் | 2.6 |
| | | 4. மனித வள முகாமைத் துவத்தில் குறைபாடு கள் | 2.10 |

| | | | |
|---|---|---|---|
| 127(2) | தனது நிர்வாகத்தின் கீழ் காணப்படும் திணைக்களங் களில் அப்போதைக்கு இருக்கும் செலவு விடயங்கள் உட்பட புதிதாக அல்லது மிகையாக செலவிடுவதற்கான பிரேரணைகள் சிக்கனமாகவும் மற்றும் செயற்திறனாக அமைச்சில் கூர்மையான பரிசோதனை மேற்கொள்ள ப்பட வேண்டும். | 1. பிரதான அபிவிருத்தி செய்பணிகள் 02 எதிர்பார்த்த விதமாக நிறைவேற்றப்பட்டிரு க்காமை.<br>2. பிரதான அபிவிருத்தி செய்பணிகள் 03 நிறைவேற்றுவதில் காணப்பட்ட தாமதங்கள்<br>3. பெறுகை செயற்பாடு கள் செயற்படுத்து வதில் உள்ள குறை பாடுகள் | 2.2(அ)<br>2.2(ஆ)(இ)<br>2.3.1(அ) |
| 127(6) | கணக்கீட்டு உத்தியோக த்தர்களின் பேரில் காணப்பட்ட வருமானம் அல்லது அரசிற்கு கிடைக்க வேண்டிய ஏனைய கட்டணங்கள் சேகரிக்கும் செயற்பாடு களை உரிய கவனத்துடன் செயற்பட்டு அமைச்சின் பரிசோதனைகளுக்கு உட்படுத்துதல் | அரசாங்க உத்தியோக த்தர்களுக்கான முற்பணக் கணக்கில் குறைபாடுகள் | 2.9 |

**நிதிப்பிரமாணம் 128(1) பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களித்தன்மை**

-----------------------------------------------------------------------

நிதிப்
பிரமாணம்

-------------------

| | | | |
|---|---|---|---|
| 128(1)(அ) | அரசினால் நிர்ணயிக்கப்பட்டு குறிப்பிடப்பட்டுள்ள கொள்கை மற்றும் அதிகாரம் வழங்கப்படும் நடவடிக்கைகளுக்காக நிதி ஏற்பாடு செய்து கொடுப்பதில் பாராளுமன்றத்தின் சவால்களை கவனத்திற்கொண்டு தமது திணைக்களத்தின் நடவடிக்கைகள் வெளிப்படை தன்மையுடன் திட்டமிடப்பட்டு செயற்படுத்துவதா கவும் நடப்பாண்டிற்கான நிர்ணயி க்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை பூர்த்தி செய்வதற்கும் அல்லது நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை நிறைவேற்றுவதற்கு முயற்சி எடுத்தல். | 1. பாதீட்டு மதிப்பீடு நடைமுறைச் சாத்திய மாக தயாரிக்கப் படாமை.<br>2. எதிர்பார்க்கப்பட்ட உற் பத்தி மட்டம் பெற்றுக் கொள்ளப்படாமை | 2.8(i)(ii)<br>2.2(அ)(ஆ)(இ) |

| | | | |
|---|---|---|---|
| 128(1)(ஏ) | நிலுவையாகவுள்ள கட்டண ங்கள் ஆகியவற்றை அறவீடு செய்வதற்கு விஷேட ஏற்பாடுகள் மேற்கொள்வ தெனவும் அந்த கருமம் சாட்டப்பட்டிருந்த உத்தியோ கத்தவர்களினால் நிலுவை பணம் தொடர்பாக அவற்றை அறவீடு செய்தவை விரைவு படுத்துவதற்காக எடுக்கப்பட்ட கட்டங்கள் தொடர்பாக குறைந்தளவு மூன்று மாதங்களுக்கு ஒரு முறை அல்லது வேறு முறையில் கட்டளையிட்டுள்ளவாறு தனக்கு அறிவிப்பதாகவும், | அரசாங்க உத்தியோகத்த ர்களுக்கான முற்பணக் கணக்கில் நிலுவையான கடன் மீதிகளை அறவிடல் | 2.9(ஆ) |
| 128(1)(க) | கணக்கீட்டு உத்தியோகத்தராகப் பொறுப்பேற்றிருக்கும் செலவுத் தலைப்பின் ஒவ்வொரு நிகழ்ச்சித் திட்டம் சம்பந்தமான நிதியாண்டு முடிவில் ஓர் ஒதுக்கீட்டு கணக்கு, பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்குச் சமர்ப்பிக்கப்படுகின்றது எனவும் | ஒதுக்கீட்டுக் கணக்கில் குறிப்பிடப்பட்ட குறைபாடு கள் | 2.8(ii) |
| 128(2)(ஐ) | தேவையான இடத்தில் பொருளாதார நிலைகளிலும் பிற நிலைகளிலும் ஏற்பட்டுள்ள மாற்றங்களைக் கவனித்து காலத்துக்கு காலம் வரிகள், கட்டணங்கள் முதலியவற்றின் வீதங்களும் செலவுப் பணங்களும் அறவீடு மீளாய்வு செய்யப்பட்டு அவற்றை மீள அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றனது என்பதனையும் | கட்டண திருத்தங்கள் தொடர்பாக வர்த்தமானி அறிவித்தல் பிரசுரிப்பதில் தாமதம் | 2.7(ஆ) |

## 2. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 செயலாற்றுகை

**திட்டமிடல்**

2014 பெப்ரவரி 17 திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2017 ஆண்டிற்காக செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் போது அமைச்சினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த 06 பிரதான செய்பணிகள் மற்றும் அமைச்சின் கீழ் நிறுவியிருக்கும் 03 நியதிச் சட்ட நிறுவனங்களின் எதிர்பார்த்த விளைவுகளை பெற்றுக்கொள்வதற்காக தயாரிக்கப்பட்டிருந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் பின்வரும் விடயங்கள் உட்படுத்தியிருக்கவில்லை.

(அ) மீளாய்வாண்டின் போது ரூபா 1,026 மில்லியன் ஏற்பாடுகள் ஒதுக்கியிருந்த 02 அபிவிருத்தி கருமங்கள் செயற்படுத்துவதற்குரிய கால சட்டகம், எதிர்பார்த்த விளைவுகள் மற்றும் பெறுபேறுகளை காட்டும் திட்டமொன்றும்,

(ஆ) கடற்படை செயலகத்தினால் 1971 இன் 52 ஆம் இலக்க வாணிப கப்பல்கள் சட்டத்தின் கீழ் அனுமதிப்பத்திரம் மற்றும் ஏனைய கட்டணங்கள் அறவிடப்பட்டு திறைசேரிக்கு செலவு வைக்கப்பட வேண்டும். அதன் பிரகாரம் ஆண்டிற்கான மதிப்பீடு செய்யப்பட்டிருந்த ரூபா 60 மில்லியனிற்கான வருமானத்தை சேகரிக்கும் காலப்பகுதி மற்றும் சேகரிக்கும் முன்னேற்றத்தை காட்டும் திட்டம்.

(இ) கடற்படை செயலகத்தின் அமைப்புக் கட்டமைப்பு மற்றும் பதவியணி விபரங்கள்.

(ஈ) மீளாய்வாண்டின் போது ரூபா 2,090.7 தொகைக்கான அபிவிருத்தி கருமங்கள் மற்றும் 7.0 மில்லியனிற்கான மூலதன சொத்துக்களை தனதாக்குவதற்கான பெறுகைகளை நிறைவேற்றும் கால காலப்பகுதியைக் காட்டும் பெறுகை திட்டம்

(உ) துறைமுக அதிகார சபை மற்றும் வ/ப இலங்கை கப்பல் கூட்டுத்தாபனம் ஆகிய நிறுவனங்களுக்கு உரிய பெறுகை திட்டம் மற்றும் உள்ளகக் கணக்காய்வுத் திட்டம்

### 2.2 செய்பணிகளை நிறைவேற்றாமை

**(அ) செயல் நடவடிக்கைத் திட்டமத்தில் உள்ளடக்கிய செய்பணிகளை நிறைவேற்றாமை**

வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், அமைச்சினால் 06 பிரதான அபிவிருத்தி செய்பணிகள் நிறைவேற்ற வேண்டியிருந்த போதிலும், அவற்றில் 02 செயற்பணிகள் எதிர்பார்த்தவாறு நிறைவேற்றியிருக்கவில்லை. அவ்வாறு நிறைவேற்றப்படாத பிரதான கருமங்களுக்காக கூட்டுத்தொகை ரூபா 1,019.7 மில்லியனிற்கான ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(i) காலித் துறைமுக அபிவிருத்தி செயற்திட்டத்தை இடைநிறுத்துதல்**

ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மை (JAICA) யின் கடன் உதவியின் கீழ் காலித் துறைமுகத்தினை அபிவிருத்தி செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்காக துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அலுவல்கள் அமைச்சிற்கு 2015, 2016 ஆண்டுகளின் போது ரூபா 2,500 மில்லியனும் 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 1,015 மில்லியனும் ஆக மொத்தம் ரூபா 3,515

மில்லியன் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்தது. காலி துறைமுகத்தை அண்மித்த பழைய காலி நகரம் உலக உரிமை என பெயரிடப்பட்டுள்ளதால் காலி துறைமுகத்தின் அபிவிருத்தி அலுவல்களுக்காக யுனெஸ்கோ அமைப்பின் இணக்கத்தை பெற்றுக்கொள்வதற்காக 3 வருடங்களை அண்மித்த காலம் கடந்திருந்ததுடன் அதற்கு முன்னர் கடன் உடன்படிக்கையின் காலம் முடிவடைந்திருந்தது. செயற்திட்டத்திற்காக ஏற்பாடுகள் மேற்கொள்வதற்கு முன்னர் தேவைப்படுகின்ற தடைநீக்கங்கள் மற்றும் இணக்கத் தன்மை பெற்றுக்கொள்ளாமையால் செயற்திட்டம் ஆரம்பிப்பதற்கு முடியாதிருந்ததுடன் 2017 ஆண்டிற்காக ஒதுக்கியிருந்த ரூபா 1,000 மில்லியனிற்கான ஏற்பாடுகள் 2017 ஜூலை 19 திகதி முதல் முடக்கி வைக்கப்பட்டிருந்தது.

**(ii) சர்வதேச கடல்சார் அமைப்பின் (IMO) நியதிச் சட்டங்கள் இனங்கக்கூடிய விதமாக கடலோர பிரமாணங்கள் மற்றும் உள்நாட்டு சட்டங்களை திருத்துதல்**

---

சர்வதேச கடல்சார் அமைப்பு (IMO) சர்வதேச நியதிச் சட்டத்தை நிறைவேற்றுவதற்குத் தேவையான விதமாக உள்நாட்டு சட்டங்களை திருத்துதவற்கு 2015 ஏப்ரல் 29 திகதி அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் 2016 மற்றும் 2017 ஆண்டுகளின் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் கடலோர பிரமாணங்கள் மற்றும் உள்நாட்டு சட்டங்கள் சர்வதேச நியதிச் சட்டங்களுக்கு இணங்கக் கூடிய விதமாக திருத்தப்பட்டு பாராளுமன்றத்தின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்கு திட்டமிட்டிருந்த போதிலும் திருத்தப்பட்ட சட்டங்களுக்காக சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் சட்ட வரைஞர் திணைக்களம் இறுதி இணக்கப்பாட்டினை அணுகி இருக்காமையினால் 2017 ஆண்டின் போது ஒதுக்கப்பட்ட ரூபா 4.7 மில்லியன் ஆகிய மொத்த ஏற்பாடுகளும் சேமிக்கப்பட்டிருந்தது.

**(ஆ) எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டத்தை அடையப்படாமை**

---

**ஹம்பாந்தோட்டை துறைமுகம் - கட்டம் II இற்கான காணிகளை தனதாக்கல் மற்றும் நட்டஈடு வழங்கள்**

---

இந்த செயற்திட்டங்களுக்காக 2016 மற்றும் 2017 ஆகிய ஆண்டுகளின் போது ரூபா 1,000 மில்லியன் வீதம் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்தது. அந்த ஏற்பாடுகளில் இருந்து 2016 ஆண்டின் போது காணிகளை தனதாக்கல் மற்றும் நட்டஈடு செலுத்துதல் என்பனவற்றிற்காக ரூபா 892.5 மில்லியன் தொகையும், 2017 ஆண்டின் போது காணிகளை தனதாக்கல், நட்டஈடு வழங்கல், உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 326.6 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் போது ரூபா 673.4 மில்லியன் தொகை குறை பயன்பாட்டுடன் காணப்பட்டது. உரித்தாக்கிய காணிகளில் முன்னர் காணப்பட்ட உரிமையினை இரத்துச் செய்து சட்டரீதியான உரிமையை உரித்தாக்கல் மற்றும் தனதாக்கப்பட்ட காணிகளின் ஆரம்ப வதிபவர்களுக்கு வழங்கியிருந்த மாற்று காணிகளுக்காக முறையான உரிமை சான்றிதழ் வழங்கும் நடவடிக்கை 2018 மே 08 திகதி வரையும் பூர்த்தி செய்திருக்கவில்லை.

**(இ) செயற்திட்டங்கள் நிறைவேற்றுவதில் தாமதங்கள்**

-----------------------------------------------------------------------------

அமைச்சினால் பின்வரும் செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள் அவதானிக்கப்பட்டன.

| செயற்திட்டம் | ஒதுக்கியிருந்த ஏற்பாடு | ஆரம்பிக்கப்பட்ட திகதி | பூர்த்தி செய்ய வேண்டிய திகதி | பூர்த்தி செய்த திகதி | 2017 திசெம்பர் 31 திகதி வரை செலவு | தாமதத்திற்கு காரணம் |
|---|---|---|---|---|---|---|
| -------------------- | ------------------- | ----------------- | --------------- | --------------------- | ----------------- | ------------- |
| | ரூ.மில்லியன் | | | | ரூ.மில்லியன் | |
| யாழ்ப்பாண குடா நாட்டில் மற்றும் அதனை சேர்ந்த தீவுகளில் இறங்கு துறை வசதிகளை அபிவிருத்தி செய்தல் - | | | | | | |
| i. சுருக்கு வழி (Slipway) நிர்மாணித்தல் | 50 | 2016.08.29 | 20.17.12.31 | நிர்மாணவேலை பூர்த்தி செய்யப்படவில்லை | | அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை |
| ii. அலுவலகம் மற்றும் உத்தியோக பூர்வ வாசஸ்தலம் நிர்மாணித்தல் | 35 | 2016.07.10 | 2017.12.31 | நிர்மாணவேலை பூர்த்தி செய்யப்படவில்லை | 35 | அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை |
| iii. இலங்கை வணிக மாலுமிகளுக்கான சர்வதேச மட்டத்தில் அங்கீகாரமுடைய விடுவித்தல் சான்றிதழ்கள் மற்றும் தேர்ச்சிச் சான்றிதழ்கள் வழங்குதல். கட்டம் 11 | 26 | 2016.10.31 | 2017.04.30 | வேலை பூர்த்தி செய்யப்படவில்லை | 11.5 | அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(i) யாழ்ப்பாணக் குடாநாடு மற்றும் அண்மித்த தீவுகளில் ஜெடி வசதிகளை அபிவிருத்தி செய்தல்**

---------------------------------------------------------------------------------------------------------------------------

இந்த செயற்திட்டத்தின் கீழ் 2016 மற்றும் 2017 ஆண்டுகளின் போது முறையே ரூபா 50 மில்லயின் மற்றும் ரூபா 35 மில்லியன் ஆக மொத்தம் ரூபா 85 மில்லியன் ஏற்பாடுகள் ஒதுக்கியிருந்தது. இதற்காக 2016, 2017 ஆண்டுகளின் போது முறையே ரூபா 14.5 மில்லியன் மற்றும் ரூபா 20.5 மில்லியன் வீதம் கூட்டுத்தொகை ரூபா 35 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் கீழ் யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் ஊடாக 02 அபிவிருத்தி செயற்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

**(i) கப்பற்துறை செயலகத்தில் யாழ்ப்பாண மாவட்ட உப அலுவலகம் மற்றும் உத்தியோகபூர்வ வாசஸ்தலம் நிர்மாணித்தல்**

மாவட்ட உப அலுவலகம் மற்றும் உத்தியோகபூர்வ வாசஸ்தலம் நிர்மாணித்தல் 2018 ஆகஸ்ட் 8 திகதி அளவில் பூர்த்தி செய்வதற்காக திட்டமிட்டிருந்த போதிலும் அத் திகதியில் உள்ளவாறு நிர்மாண வேலைகளில் காணப்பட்ட முன்னேற்றம் 45 சதவீதமாகும்.

**(ii) சுருக்கு வழி (Slipway) நிர்மாணித்தல்**

இந்த நிர்மாண வேலைக்காக 2016 ஆகஸ்ட் 29 திகதி கடற்படையுடன் உடன்படிக்கை ஒன்றிற்கு அணுகியிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிர்மாணவேலைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் 2017 திசெம்பர் 31 திகதி அளவிலும் வேலை முற்றாக பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டிற்காக முன்னேற்ற மீளாய்வு அறிக்கையின் பிரகாரம் அத்திகதி அளவில் காணப்பட்ட ஒட்டுமொத்த நிர்மாணவேலைகளின் பௌதீக முன்னேற்றம் 65 சதவீதமாகும்.

**(ii) இலங்கையின் வாணிப மாலுமிகளுக்காக சர்வதேச மட்டத்தில் ஏற்றுக்கொள்ளக் கூடிய இடையறாது விடுவிக்கும் சான்றிதழ்கள் மற்றும் தேர்ச்சிச் சான்றிதழ் வழங்கும் செயற்திட்டம்**

மேற்கூறிய செயற்திட்டத்திற்காக வழங்குனருடன் மேற்கொண்டிருந்த உடன்படிக்கையின் பிரகாரம் 2017 ஏப்ரல் 30 திகதியில் உள்ளவாறு அலுவல்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் 2017 திசெம்பர் 31 திகதி வரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.3 பெறுகை செயன்முறையினூடாக வழங்கல்கள் சேவைகள் பெற்றுக்கொள்ளல்

அமைச்சினால் அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் செயற்பட்டு பெற்றுக்கொள்ள வேண்டிய வழங்கல்கள் மற்றும் சேவைகளுக்காக ரூபா 13.56 மில்லியன் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அவற்றில் ரூபா 11.26 மில்லியன் தொகை ஏற்பாடுகள் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 2.3 மில்லியன் அதாவது ஒதுக்கியிருந்த ஏற்பாடுகளில் 16.96 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது.

### 2.3.1 பெறுகைகளை திட்டமிடல்

அமைச்சுக்கு மீளாய்வாண்டின் போது பெறுகை செயற்முறையின் மூலம் வழங்கல்கள் மற்றும் சேவைகள் பெற்றுக்கொள்வதற்காக ரூபா 13.56 மில்லியன் இற்கான ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அவற்றில் ரூபா 11.26 மில்லியன் தொகை பயன்படுத்தியிருந்ததுடன் ஒதுக்கப்பட்டிருந்த ஏற்பாடுகள் தொடர்பாக தயாரிக்கப்பட வேண்டிய பெறுகை திட்டம் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**பெறுகை திட்டமிடல் மற்றும் ஆரம்ப கட்டம்**

அமைச்சினால் மீளாய்வாண்டிற்காக பெறுகை திட்டமொன்று 2017 பெப்ரவரி 17 ஆம் திகதி தயாரிக்கப்பட்டிருந்தது. எனினும் அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.2.1 மற்றும் 4.2.2 இல் காட்டப்பட்டுள்ளவாறு எதிர்வரும் மூன்று ஆண்டுகளுக்காக எதிர்பார்க்கும் பெறுகை அலுவல்கள் மற்றும் தொடர்ந்துவரும் ஆண்டிற்காக பெறுகை அலுவல்கள் விரிவாக்க காட்டும் படியான பிரதான பெறுகை திட்டமொன்று மற்றும் பெறுகை நேரசூசி ஒன்று

தயாரித்திருக்கவில்லை. மேலும், ஆண்டின் போது 05 சந்தர்ப்பங்களில் கொள்வனவு செய்திருந்த ரூபா 3,140,177 தொகைக்கான தளபாடங்கள் மற்றும் அலுவலக் உபகரணங்கள் கொள்வனவு செய்யும் பெறுகை விடயங்களின் போது பெறுகை வழிகாட்டல் கோவையின் 2.11.3 பந்தியில் மற்றும் 6.3.6 பந்தியில் காட்டியுள்ள படிவங்களை பயன்படுத்தியிருக்கவில்லை.

## 2.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

### (அ) வாகனப் பயன்பாடு

அமைச்சில் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு கீழ்வருமாறு 35 வாகனங்கள் காணப்பட்டதுடன் அந்த வாகனங்களின் மூலம் 599,671 கிலோமீற்றர் ஓடி இருந்ததுடன், அதற்காக எரிபொருள் மற்றும் உராய்வு நீக்கிகளுக்காக ரூபா 10,280,014 தொகையும், வாகனங்களை சேவிஸ் செய்வதற்காக ரூபா 2,257,503 தொகையும், வாகனங்களின் பழுதுபார்தல்களுக்காக ரூபா 11,624,718 தொகையும் மற்றும் வாகன காப்புறுதிக்காக ரூபா 3,013,346 தொகையும் ஆக மொத்தம் ரூபா 27,175,581 தொகை செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் வாகனங்களை ஓட்டுவதற்காக சாரதி சம்பளம் மற்றும் படிகள் தவிர ஒரு கிலோமீற்றருக்காக ரூபா 45.32 தொகை செலவிடப்பட்டிருந்தது.

### (ஆ) நிதி மற்றும் செயற்பாட்டு குத்தகை அடிப்படையில் வாகனங்கள் பயன்படுத்துதல்

அமைச்சினால் செயற்பாட்டுத் குத்தகை அடிப்படையில் பெற்றிருந்த வாகனம் ஒன்றிற்காக குத்தகை தவணைப் பணமாக ரூபா 2,084,292 தொகையும், எரிபொருள் மற்றும் உராய்வு நீக்கி எண்ணைக்காக ரூபா 248,520 தொகையும் ரூபா 2,332,812 தொகை செலவு ஒன்று மேற்கொண்டிருந்தது. இந்த வாகனம் 36,654 கிலோமீற்றர் ஓடியிருந்தது. அதன் பிரகாரம் ஒரு கிலோமீற்றர் ஓடுவதற்காக ரூபா 63.64 செலவிடப்பட்டிருந்தது.

### (இ) அலுவலகம் நடாத்துவதற்காக செலவு

அமைச்சு வருடாந்தம் ரூபா 21,286,758 வாடகைக்கு பெற்றிருந்த 2 கட்டிடங்களில் அலுவலகம் நடாத்தப்படுகின்றது. வருடாந்தம் சுத்திகரிப்பு வேலைக் கட்டணம் ரூபா 3,809,712 தொகை காணப்பட்டதுடன் நீர், மின்சாரம் மற்றும் ஏனைய செலவுகளுக்காக ரூபா 8,552,529 தொகை மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மொத்த கட்டிடத்திற்கான செலவு ரூபா 33,648,999 தொகையாக இருந்தது. அதன் பிரகாரம் ஒரு நபருக்கான அலுவலகம் நடாத்தும் செலவு ரூபா 350,510 ஆகும்.

## 2.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

இலங்கை துறைமுகங்கள் அதிகார சபைக்கு சொந்தமான கிழக்கு கொள்கலன் முடிவிடம் அரச மற்றும் தனியார் உபாய வழிகள் பங்குடமையுடன் செயற்படுத்துவதற்காக அக்கறை செலுத்தும் தரப்பினர்களின் அபிப்பிராயம் மற்றும் வாணிப பிரேரணைகள் அழைத்தல் உட்பட அலுவல்களை மேற்கொள்வதற்காக செயற்திட்டத்தை நெறிப்படுத்தவதற்காக ஆலோசகர் என ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB) 2016 பெப்ரவரி 23 திகதி நியமனம் செய்யப்பட்டிருந்த போதிலும் இந்த ஆலோசனை சார் கருமங்கள் மற்றும் பிரேரணைகள் அழைத்தல் உட்பட அலுவல்கள் 2016 திசெம்பர் 21 திகதியின் பின்னர் செயற்படாமல் காணப்பட்டது. எவ்வாறாயினும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கு அமைச்சினால் 2016 மற்றும் 2017 ஆண்டுகளின் போது செலுத்தியிருந்த கூட்டுத்தொகை ரூபா 24,341,965 தொகைக்கான (159,977 அமெரிக்க டொலர்) தங்கியிருத்தல் கட்டணம் மற்றும் பிரயாணச் செலவு பயன் அற்றதாகியுள்ளது.

**2.6 தீர்த்திருக்காத கணக்காய்வுப் பந்திகள்**

அமைச்சிற்கான 2016 ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் 3.9 பந்தியின் மூலம் சுட்டிக்காட்டிய அமைச்சுக்குச் சொந்தமான ஜீப் வண்டி ஒன்றிற்கு 2015 ஆண்டின் போது ஏற்பட்டிருந்த விபத்தில் காப்புறுதி அணவல் மூலம் இழப்பீடு செய்யப்படாத ரூபா 481,550 இற்கான நட்டத்தை உரிய தரப்பினரிடம் 2017 திசெம்பர் 31 திகதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

**2.7 முகாமைத்துவத் திறமையின்மை**

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

**(அ) வருமான மதிப்பீடு தயாரிப்பதில் பலவீனங்கள்**

திறைசேரியில் பல்வேறு வருமானத் தலைப்புகளுக்காக சேகரிக்கப்பட வேண்டியிருந்த வருமானம் தொடர்பாக கப்பல்துறை செயலகத்தினால் மதிப்பீட்டு வருமானம் 2015 ஆண்டிற்காக ரூபா 45 மில்லியன் தொகை மற்றும் 2016 மற்றும் 2017 ஆண்டிற்காக ரூபா 60 மில்லியன் வீதம் காணப்பட்டதுடன் உள்ளவாறான வருமானம் முறையே ரூபா 91 மில்லியன், ரூபா 86 மில்லியன் மற்றும் ரூபா 110 மில்லியன்களாக இருந்தது. அதன் காரணமாக மதிப்பீட்டு மற்றும் உள்ளவாறான வருமானம் இடையே முறையே 202 சதவீதம், 143 மற்றும் 183 சதவீத வித்தியாசங்கள் காணப்பட்டது.

**(ஆ) கட்டணத் திருத்தம் தொடர்பாக வர்த்தமானி அறிவித்தல் வெளிப்படுத்துவதில் தாமதம்**

இடையறாமல் விடுவித்தல் சான்றிதழ்கள் (CDC) தேர்ச்சி சான்றிதழ் (CDC) வழங்குத்தல், நாளது வரை ஆக்கல் மற்றும் பிரதிகள் வழங்கும் கட்டணம் 2017 பெப்ரவரி 01 திகதி 50 சதவீதம் முதல் 233 சதவீதம் வரையான வீச்சினால் அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டுமென் நிபந்தனையில் அதிகரித்திருந்த போதிலும் 2018 ஆகஸ்ட் 30 திகதி வரை அதற்காக அமைச்சரவையின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு மற்றும் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**2.8 பணிகளை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தினால் வழங்கியிருந்த ஏற்பாடுகளை பயன்படுத்துதல்**

2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த 03 வருட காலப்பகுதியில் அமைச்சுக்கு வழங்கப்பட்டிருந்த ஏற்பாடுகள், பயன்படுத்தல் மற்றும் சேமிப்பு தொடர்பான தகவல்கள் மற்றும் அது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| ஆண்டு | செலவின வகை | தேறிய ஏற்பாடு | பயன்படுத்தல் | சேமிப்பு | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | |
| 2015 | மீண்டுவரும் | 216.54 | 205.81 | 10.73 | 5 |
| | மூலதன | 2,011.28 | 8.71 | 2,002.57 | 99.6 |
| | **மொத்தம்** | **2,227.82** | **214.52** | **2,013.30** | **90.3** |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2016 | மீண்டுவரும் | 197.40 | 179.06 | 18.34 | 9.3 |
| | மூலதன | 1,747.77 | 1,052.80 | 694.97 | 40 |
| | **மொத்தம்** | **1,945.17** | **1,231.86** | **713.31** | **36.7** |
| 2017 | மீண்டுவரும் | 251.85 | 209.74 | 42.11 | 16.7 |
| | மூலதன | 2,148.25 | 410.30 | 1,737.96 | 81 |
| | **மொத்தம்** | **2,400.10** | **620.04** | **1,780.07** | **74** |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(i) ஏற்பாடுகள் பயன்படுத்தாமை மற்றும் குறைவாகப் பயன்படுத்துதல்**

நிதிப் பிரமாணம் 04 இன் பிரகாரம், பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிதியம் அந்த நிதியாண்டில் நிறைவேற்றக் கூடிய நிகழ்ச்சித் திட்டங்களுக்கு வரையறுக்கப்படுவதை உறுதிப்படுத்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு ஒன்றாக இருந்த போதிலும் அதற்கு முரணாக ஏற்பாடுகள் ஒதுக்கிக் கொள்வதன் காரணத்தினால் துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சினால் 2017 ஆண்டிற்கான தேறிய ஏற்பாடுகளில் 74 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. தேறிய ஏற்பாடுகளில் 25 சதவீதம் முதல் 100 சதவீதம் வரை மீதியுடன் 14 மூலதன செலவு விடயங்களில் ரூபா 1,737.20 மில்லியன் தொகையும், 12 மீண்டுவரும் செலவு விடயங்களில் ரூபா 23.48 மில்லியன் ஆக மொத்தம் ரூபா 1,760.68 இற்கான ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டுக் காணப்பட்டது. எவ்வாறாயினும் இவற்றில் ரூபா 1010 மில்லியன் ஏற்பாடுகள் 2017 ஜூன் மாதம் முதல் திறைசேரியால் முடக்கி இருந்தது.

**(ii) நிதிப் பிரமாணம் 66 இன் கீழ் மாற்றப்பட்டிருந்த ஏற்பாடுகளில் சேமிப்புக்கள்**

அதே போல் நிதிப்பிரமாணம் 66 இன் கீழ் மாற்றப்பட்டிருந்த வருட இறுதி அளவிலும் பயன்படுத்தியிருக்காத 08 சந்தர்ப்பங்கள் தொடர்பாக ரூபா 3,018,663 இற்கான ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்ததுடன் மாற்றப்பட்டிருந்த ஏற்பாடுகளில் சதவீதமாக சேமிக்கப்பட்டிருந்த தொகையை கவனத்தில் எடுக்கும் போது 27 சதவீதம் முதல் 203 சதவீதம் வரையில் காணப்பட்டது. கட்டுநிதி போதியளவில் கிடைக்காமை இதற்கான காரணம் என செயலாரினால் அறிவிக்கப்பட்டிருந்தது.

## 2.9 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

அமைச்சுக்குரிய 176011 விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானது | ஆகக் குறை ந்த எல்லை | உள்ளபடி யானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 6.00 | 5.93 | 3.50 | 4.13 | 18.00 | 14.46 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) ஆண்டின் போது தீர்க்கப்பட்ட கடன் மீதி கணக்குகளில் சீராக்கல் செய்திருக்காமை**

மீளாய்வாண்டின் போது இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள பெண் உத்தியோத்தர் ஒருவரிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 184,265 இற்கான கடன் மீதயை தீர்த்திருந்த போதிலும் அதன் கணக்குகளில் சீராக்கல் செய்திருக்காமையால் அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கில் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காணப்பட்ட மீதி ரூபா 184,265 தொகை மிகையாக காட்டப்பட்டிருந்தது.

**(ஆ) இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள உத்தியோகத்தர்களிடம் அறவிடப்பட வேண்டிய கடன் மீதிகள்**

அமைச்சில் இருந்து வெளி நிறுவனங்களுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள 06 உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 462,583 இற்காக கடன் மீதி மற்றும் வேலை இடை நிறுத்தப்பட்ட மற்றும் சேவையை விட்டுச் சென்றுள்ள இரண்டு உத்தியோத்தர்களிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 314,610 இற்காக கடன் மீதிகள் அறவீடு செய்யப்படாமல் 13 வருடங்களை விட மிகையான காலம் முதல் முன்கொண்டு வந்து காணப்பட்டது. இதற்காக உரிய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**2.10 மனித வள முகாமைத்துவம்**

**2.10.1 இணைக்கப்பட்ட பதவியணி மற்றும் உள்ளபடியான பதவியணி மற்றும் ஆளணி வேதனங்களுக்கான செலவினம்**

இலங்கை துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சின் செய்பணிகளை நிறைவேற்றுவதற்காக 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்டுள்ள, உள்ளவாறான, வெற்றிட மற்றும் மிகை பதவியணி மீதான விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன. மீளாய்வாண்டிற்கான அமைச்சினால் ஆளணி வேதனங்கள் செலவின தொகுதிக்காக ரூபா 95 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஒரு ஆளுக்கான செலவு ரூபா 989,485 தொகை ஆக இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிட பதவியணியின் எண்ணிக்கை | மிகை பதவியணியின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 36 | 19 | 17 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 14 | 04 | 10 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 80 | 40 | 40 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 55 | 25 | 30 | - |
| (v) | அமைய/ஒப்பந்த | 03 | 08 | - | 05 |
| | மொத்தம் | 188 | 96 | 97 | 05 |

இது தொடர்பான பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பொறியியல் துறைகள் சேர்ந்த கப்பல்துறை உயர் தொழில் செய்வோருக்கான 05 வெற்றிடங்கள் உட்பட சிரேஷ்ட நிலையில் 17 வெற்றிடங்கள் காணப்பட்டன. இந்த பிரதி கூலமான நிலை அமைச்சின் கருமம் மற்றும் செய்பணிகள் நடாத்திச் செல்வதற்காக பாதிப்பாக இருக்காது என கணக்காய்வின் அகற்றுவதற்கு முடியாதுள்ளது.

(ஆ) மூன்றாம், இரண்டாம் மற்றும் ஆரம்ப நிலைகளில் காணப்பட்ட நாளாந்த கருமங்களுக்கு நேரடியாக பாதிக்கக் கூடிய 80 ஊழியர்களின் வெற்றிடங்கள் காணப்பட்டது.